# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

**අංක 12,108 — 1960 අප්‍රේල් 14 වැනි බ්‍රහස්පතින්ද — 14.4.1960**

12,108 ம் இலக்கம் — 1960 ம் ஆண்டு ஏப்றில் மாதம் 14 ந் திகதி வியாழக்கிழமை

**(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)**


# பகுதி I: தொகுதி (I)—பொது

## விலைக் கட்டளைகள்

*உணவு விலைக் கட்டளை இல. கெ டி 81* — **அரிசியும் நெல்லும்.**

**1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக் கட்டுப்பாட்டுச் சட்டம்**

**கட்டளை**

1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 3 (2) ம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 4 ம் பிரிவினால் எனக்கு அளிக்கப் பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு கண்டி மாவட்டத்திற்கும், நுவரேலியா மாவட்டத்திலுள்ள உடஹேவாஹட்டப் பிரிவு அதிகாரியின் பகுதிக்கும், பிரதி விலைக் கட்டுப்பாட்டதிகாரி (உணவு) அலன் பேசில் சாமுவல் நேசராஜா புள்ளைநாயகம் ஆகிய நான் இக்கட்டளையால்—

(1) 1959 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 21 ந் திகதி வெளிவந்த 12,015 ம் இலக்க இலங்கை அரசாங்க அதி விசேஷ வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட எனது கெ டி, 79 ம் இலக்க உணவு விலைக் கட்டளையை 1960 ம் ஆண்டு ஏப்றில் மாதம் 11 ந் திகதியிலிருந்து நிராகரித்துவிடுகிறேன் ;

(2) 1960 ம் ஆண்டு ஏப்றில் மாதம் 11 ந் திகதியிலிருந்து இத்துடனிணைக்கப்பட்டிருக்கும் 1 ம் அட்டவணையில் 1 ம் பத்தியிலுள்ள இடங்களில் அதற்கு நேரே 2 ம் பத்தியிலுள்ள விலைகள் அரிசியின் நிகர அந்தர் ஒன்றின் ஆகக்கூடிய மொத்த விற்பனை விலையென்றும் அவற்றிலும் மேலதிகமாக மொத்தமாக விற்கப்படாதென்றும் நியமிக்கிறேன் ;

(3) 1960 ம் ஆண்டு ஏப்றில் மாதம் 11 ந் திகதியிலிருந்து இத்துடனிணைக்கப்பட்டிருக்கும் 2 ம் அட்டவணையில் 1 ம் பத்தியிலுள்ள இடங்களில் அதற்கு நேரே 2 ம் பத்தியிலுள்ள விலைகள் அரிசியின் நிகர இருத்தல் ஒன்றின் ஆகக்கூடிய சில்லறை விற்பனை விலையென்றும் அவற்றிலும் மேலதிகமாக சில்லறையாக விற்கப்படாதென்றும் நியமிக்கிறேன் ;

(4) 1960 ம் ஆண்டு ஏப்றில் மாதம் 11 ந் திகதியிலிருந்து பங்கீட்டிற்கு வழங்கப்படும் அளவு நெல்லின் நிகர அந்தர் ஒன்றின் ஆகக் கூடிய மொத்த விற்பனை விலையும் நிகர இருத்தல் ஒன்றின் ஆகக்கூடிய சில்லறை விற்பனை விலையும் முறையே அந்தந்த இடங்களில் பங்கீட்டிற்கு வழங்கப்படும் அரிசியின் நிகர அந்தர் ஒன்றின் ஆகக்கூடிய மொத்த விற்பனை விலையினதும் ஆகக்கூடிய சில்லறை விற்பனை விலையினதும் பாதியாக இருத்தல் வேண்டுமென்றும் அதற்கு மேலதிகமாக எந்த இடத்திலும் பங்கீட்டிற்கு வழங்கப்படும் அளவு நெல்லை விற்கப்படாதென்றும் நியமிக்கிறேன் ;

(5) இக்கட்டளையின் நோக்கத்துக்காக—

(அ) எவ்வளவு தொகையான அரிசியை மறுபடியும் விற்கும்பொருட்டு விற்றால் அது மொத்த விற்பனையாகக் கருதப்படும் ;

(ஆ) எவ்வளவு தொகையான அரிசியையும் உணவுக்காக அல்லது வேறு உபயோகத்துக்காக விற்றால் அது சில்லறை விற்பனையாகக் கருதப்படும் ;

(இ) ஒரு நிகர அந்தருக்குக்கூட அல்லது குறையவுள்ள எவ்வளவு அரிசி அல்லது நெல்லுக்கு உரிய ஆகக்கூடிய விலை ஒரு நிகர அந்தர் அரிசி அல்லது நெல்லின் ஆகக்கூடிய மொத்த விலையின் வீதமுறைப்படி வழமைபோலக் கணக்கிடப்படல் வேண்டும் ;

(ஈ) " அளவு " என்றது உணவுக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின்கீழ் அவ்வவ்போது வழங்கப்படும் பங்கீட்டின் தொகை அரிசி அல்லது நெல்லைக் குறிப்பதாகும் ;

(உ) " இரு. " அல்லது " இருத்தல் " என்பது அவோர்டுபோஸ் எடுத்தலளவையின் பிரமாண இருத்தல் நிறையாகக் கருதப்படும் ;

(6) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலை நியமிக்கப்பட்டுள்ள இடங்களில் அரிசி அல்லது நெல்லுடன் வேறெந்தப் பொருளையாவது கலந்து விற்பனை செய்யக்கூடாதென்று நியமிக்கிறேன் ;

(7) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலை நியமிக்கப்பட்ட இடங்களில், தம் வசத்தில் அல்லது தம் கட்டுப்பாட்டின் கீழுள்ள வேறெந்த இடங்களில் அல்லது வாகனங்களில் நெல்லு அல்லது அரிசிவைத்திருக்கும் ஒவ்வொரு வியாபாரியும் அவ்விடங்களில் அல்லது வாகனங்களில் ஒரு அளவான பாத்திரமொன்றை வைத்து அதனுள் ஒரு குறிக்கப்பட்டளவு அரிசி அல்லது நெல்லை நிரப்பி, ஒரு அங்குலத்துக்குக் குறையாத எண்களில் எழுதப்பட்ட ஒரு விலை அட்டையை அல்லது பலகை ஒன்றை வாங்குபவர்கள் எளிதில் பார்க்கக்கூடியவாறு அதில் இணைத்துப் பகிரங்கமாகப் பார்வைக்கு வைத்தல் வேண்டுமென்று நியமிக்கிறேன் ;

(8) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலை நியமிக்கப்பட்ட ஒவ்வொரு இடத்திலும் அரிசி அல்லது நெல்லை மொத்தமாகவும் அல்லது சில்லறையாகவும் விற்கும் ஒவ்வொருவரும் வாங்குவோர் கேட்குமிடத்து பின்வரும் விபரங்கள் அடங்கிய ஒரு பற்றுச்சீட்டைக் கொடுத்தல் வேண்டுமென்று நியமிக்கிறேன் —

(அ) விற்பனை நடந்த தேதி ;

(ஆ) விற்கப்பட்ட அரிசி அல்லது நெல்லின் தொகை (நிறையில்) ;

(இ) விற்கப்பட்ட அரிசி அல்லது நெல்லுக்குக் கொடுபட்ட விலை ;

(ஈ) எவ்விதமான விற்பனை, அதாவது மொத்த விற்பனையா அல்லது சில்லறை விற்பனையா என்பது ;

(9) இக்கட்டளையால் நியமிக்கப்பட்டுள்ள ஆகக்கூடிய விலையில் அரிசி அல்லது நெல்லைச் சுற்றிக்கொடுக்கும் உறை அல்லது வைத்துக் கொடுக்கும் கொள்கலம் உபயோகப்படின் அதன் விலையும் அடங்குமென உத்தரவிடுகிறேன் ;

1960 ம் ஆண்டு எப்றில் மாதம் 11 ந் திகதி பி. ப. 12.30 மணிக்கு கண்டிக் கச்சேரியில் கையொப்பமிடப்பட்டது.

ஏ. பி. எஸ். என். புள்ளைநாயகம்,
பிரதி விலைக் கட்டுப்பாட்டதிகாரி (உணவு), கண்டி மாவட்டமும்,
நுவரேலியா மாவட்டத்திலுள்ள உடஹேவாஹட்டப் பிரிவு
அதிகாரியின் பகுதியும்.

## முதலாம் அட்டவணை

| | பத்தி 1<br>இடம் | பத்தி 2<br>ஒரு நிகர அந்தர் அரிசியின் ஆகக்கூடிய மொத்த விற்பனை விலை |
|---|---|---|
| | **கண்டிப் பகுதி** | ரூ. ச. |
| 1. | கண்டிப் பட்டணமும் கங்கவட்ட கோரளையும் | 13 87 |
| | **உடுநுவரை, யட்டிநுவரை** | |
| 2. | கட்டுலியத்தை | 13 88 |
| 3. | கெலிஓய | 13 97 |
| 4. | பிடுனுகம, தந்துரை, மெனிக்திவலை, தவுளகள | 14 1 |
| 5. | வேகிரிய, முறுதலாவை | 13 99 |
| 6. | வட்டப்பொள | 14 11 |
| 7. | கடுகண்ணுவ | 13 88 |
| 8. | ஈரியகாமம், பேராதனை | 13 89 |
| 9. | பத்கொடபிடிய | 14 6 |
| 10. | பொத்தபிடிய | 14 1 |
| 11. | அளக்கொளங்கை | 13 93 |
| | **தும்பனை** | |
| 12. | களகெதிரை | 14 24 |
| 13. | ஹதரலியத்தை | 14 7 |
| | **ஹாரிஸ்பத்து** | |
| 14. | அரம்பகடை, பூஜாபிட்டி, குருகொட | 14 11 |
| 15. | ஹாதெனிய, குளுகம்மனை, விகுஹும்பொலை, வெரல்லகம, அக்குறணை | 14 6 |
| 16. | பரிகம | 14 1 |
| 17. | யட்டிவாவலை | 13 97 |
| 18. | வெலேகடை | 14 1 |
| 19. | பலிபான | 14 21 |
| 20. | அளவத்துகொடை | 14 19 |
| 21. | கல்ஹின்னை, அங்கும்புற | 14 50 |
| | **பாத்ததும்பரை** | |
| 22. | வத்துகாமம் | 14 1 |
| 23. | தெல்தெனிய | 14 31 |
| 24. | பன்விலை | 14 23 |
| 25. | மடவலை | 14 10 |
| 26. | நவயாளதன்னை, கடுகாஸ்தோட்டை | 13 89 |
| 27. | பறனகம | 14 29 |
| 28. | உழுகங்கை | 14 45 |
| 29. | கெங்காலை | 14 36 |
| 30. | திகனை | 14 27 |
| 31. | அம்பதன்னை | 13 97 |
| 32. | மெனிக்கின்னை | 14 20 |
| | **மெததும்பரை** | |
| 33. | மெததும்பரை பிரிவு அதிகாரியின் தொகுதியிலுள்ள சகல இடங்களும் | 14 46 |
| | **உடதும்பரை** | |
| 34. | உடதும்பரை பிரிவு அதிகாரியின் தொகுதியிலுள்ள சகல இடங்களும் | 14 81 |
| | **பாத்தஹேவாஹெட்ட** | |
| 35. | மாரஸ்ஸனை | 14 41 |
| 36. | பட்டியகம பசார், தெல்தோட்டை | 14 53 |
| 37. | தலாத்துஓய | 14 20 |
| 38. | கலகா | 14 36 |
| 39. | அம்பிட்டிய | 14 15 |
| | **உடபலாத்தை** | |
| 40. | கம்பளை | 13 84 |
| 41. | உளபனை | 14 8 |
| 42. | புசல்லாவை | 14 32 |
| 43. | உடுவலை | 14 63 |
| 44. | கழுகமுவ | 14 15 |
| 45. | முள்கம | 14 50 |

| பத்தி 1<br>இடம் | பத்தி 2<br>ஒரு நிகர அந்தர் அரிசியின் ஆகக்கூடிய மொத்த விற்பனை விலை<br>ரூ. ச. |
|---|---|
| **உடபுளத்கம** | |
| 46. நாவலப்பிட்டி .. .. .. | 14 10 |
| 47. ஹட்டன் .. .. .. .. | 14 27 |
| 48. நோர்வூட் .. .. .. .. | 14 48 |
| 49. பொகவந்தலாவை .. .. .. | 14 83 |
| 50. கினிகத்தேனை .. .. .. | 14 57 |
| 51. மஸ்கெலியா, அக்காவத்தை, நோட்டன் பிரிட்ஜ் (ஹண்டன்ஞயிஸ்) .. | 14 81 |
| **நுவரேலியாப் பகுதியின் உடஹேவாஹெட்டப் பிரிவு** | |
| 52. பதியபலல்லை .. ... .. | 14 67 |
| 53. மதுரட்ட .. .. .. .. | 14 95 |
| 54. மனக்கொல .. .. .. | 14 67 |
| 55. ரிகில்லகஸ்கடை .. .. .. | 14 57 |
| 56. ரகதுங்கொட .. .. .. | 14 64 |
| 57. ஹங்குரன்கெத்த .. .. .. | 14 46 |
| 58. முதுனபிட்டிய .. .. .. | 14 67 |
| 59. கறள்ளியத்தை .. .. .. | 14 78 |

## இரண்டாம் அட்டவணை

| பத்தி 1<br>இடம் | பத்தி 2<br>ஒரு நிகர இருத்தல் அரிசியின் ஆகக்கூடிய சில்லறை விலை<br>ரூ. ச. |
|---|---|
| 1. (அ) கண்டி மாநகர சபை .. .. .. .. .. | |
| (ஆ) கங்கவட்டக் கோரளை .. .. .. .. .. | |
| (இ) பாத்த ஹேவாஹெட்டப் பிரிவு அதிகாரியின் தொகுதியிலுள்ள தெல்தோட்டை, போலான, பட்டியகம உடகம, பட்டியகம பள்ளேகம, பட்டியகம கபடாகம, நவனலிய, போபிட்டிய ஆகியவற்றின் கிராமத் தலைவர்களின் பகுதிகள் தவிர ஏனைய இடங்களுக்கு .. .. .. | 13 |
| 2. பாத்தஹேவாஹெட்டப் பிரிவு அதிகாரியின் தொகுதியிலுள்ள தெல்தோட்டை, போலான, பட்டியகம உடகம, பட்டியகம பள்ளேகம, பட்டியகம கபடாகம, நவனலிய, போபிடிய ஆகியவற்றின் கிராமத் தலைவர்களின் பகுதிகளுக்கு .. .. .. .. .. .. | 13½ |
| 3. உடுநுவரை யடிநுவரை, தும்பனை, ஹாரிஸ்பத்து ஆகிய பிரிவுகளின் அதிகாரிகளின் தொகுதிகளும், பாத்ததும்பரை பிரிவு அதிகாரியின் தொகுதியிலுள்ள கும்புக்கந்துரை, கெங்கல்லை ஆகியவற்றின் கிராமத் தலைவர்களின் பகுதிகளைத்தவிர, உடபுளத்கம பிரிவு அதிகாரியின் தொகுதியிலுள்ள நாவலப்பிட்டி, பெடுனுகம ஆகியவற்றின் கிராமத் தலைவர்களின் பகுதிகளும், உடபலாத்தை பிரிவு அதிகாரியின் தொகுதியிலுள்ள அட்டபாகை இகலகம, துனுகேவிலை, உடுவெல ஆகியவற்றின் கிராமத் தலைவர்களின் பகுதிகள் தவிர ஏனைய இடங்களும் .. | 13 |
| (அ) பாத்ததும்பரை பிரிவு அதிகாரியின் தொகுதியிலுள்ள கும்புக்கந்துரை, கெங்கல்லை ஆகியவற்றின் கிராமத் தலைவர்களின் பகுதிகள் .. .. .. .. .. | 13½ |
| (ஆ) உடபளாத்தை பிரிவு அதிகாரியின் தொகுதியிலுள்ள அட்டபாக இகலகம, துனுகேவில, உடுவெல ஆகியவற்றின் கிராமத் தலைவர்களின் பகுதிகளும், உடபுளத்கம பிரிவு அதிகாரியின் தொகுதியிலுள்ள பள்ளேகம, கடியன்லேன, அம்பகமுவ, ஹோமாகம, கடவெல, யடிகங்குளகாவடக்கு, யடிகங்குளகா தெற்கு, ஹட்டன், டிக்ஓயா, நோர்வூட், மஸ்கெலியா, நம்புக்பிட்டிய ஆகியவற்றின் கிராமத்தலைவர்களின் பகுதிகள் .. .. .. .. | 13½ |
| 4. (அ) உடபுளத்கம பிரிவு அதிகாரியின் தொகுதியிலுள்ள மாபகந்த, வலிகம்பொள, ஹங்கராபிட்டிய, தெகிந்த, மொரஹேனேகம ஆகியவற்றின் கிராமத் தலைவர்களின் பகுதிகள் .. .. .. | 14½ |
| (ஆ) உடபுளத்கம பிரிவு அதிகாரியின் தொகுதியிலுள்ள பொள்பிடிய கிராமத் தலைவரின் பகுதி .. | 15½ |
| (இ) உடபுளத்கம பிரிவு அதிகாரியின் தொகுதியிலுள்ள அக்கரவத்தை, கிரிவன்எலிய, பொகவந்தலாவை ஆகியவற்றின் கிராமத் தலைவர்களின் பகுதிகள் .. .. .. .. | 14 |
| 5. (அ) மததும்பரை பிரிவு அதிகாரியின் தொகுதியிலுள்ள கித்தாவ, உடகம்மத்த கிராமத் தலைவர்களின் பகுதிகளைத் தவிர ஏனைய பகுதிகள் .. .. .. .. | 13½ |
| (ஆ) மததும்பரை பிரிவு அதிகாரியின் தொகுதியிலுள்ள உடகம்மத்த கிராமத் தலைவரின் பகுதி .. | 14 |
| (இ) மததும்பரை பிரிவு அதிகாரியின் தொகுதியிலுள்ள கித்தாவ கிராமத் தலைவரின் பகுதி .. .. | 13¾ |
| 6. (அ) உடதும்பரை பிரிவு அதிகாரியின் தொகுதியிலுள்ள மீமுறை, உடத்தாவ கிராமத் தலைவர்களின் தொகுதிகள் | 15 |
| (ஆ) உடதும்பரை பிரிவு அதிகாரியின் தொகுதியிலுள்ள கந்தபஹள கோரளை .. .. | 14½ |
| (இ) உடதும்பரை பிரிவு அதிகாரியின் தொகுதியில் மேலே 6 (அ), (ஆ) வில் சொல்லப்பட்ட இடங்களைத் தவிர மற்றைய எல்லா இடங்களுக்கும் .. .. .. .. | 14 |
| 7. (அ) நுவரேலியா மாவட்டத்திலுள்ள உடஹேவாஹட்டப் பிரிவு அதிகாரியின் தொகுதியிலுள்ள மல்லள்ள கிராமத் தலைவரின் பகுதியும், கங்கபஹல கோரளையைச்சேர்ந்த உடகம கிராமத் தலைவரின் பிரிவான முதுனபிட பசாரும், தியதிலக கோரளையும், கொக்கோரளையும், கண்ணுவ கோரளையைச் சேர்ந்த அகிரியவாகம ஆகியவற்றின் கிராமத் தலைவர்களின் பகுதிகளும் .. .. .. .. | 13½ |
| (ஆ) நுவரேலியா மாவட்டத்திலுள்ள உடஹேவாஹட்டப் பிரிவு அதிகாரியின் தொகுதியிலுள்ள 7 (அ) பந்தியில் சொல்லப்பட்ட இடங்களைத் தவிர்த்து ஏனைய இடங்களுக்கு .. .. .. | 14 |

குறிப்பு.—இவ்விலைகள் அரிசி விற்க வேண்டும் என்று விதிக்கப்பட்ட விலைகள் அல்ல; இவையே ஆகக்கூடிய விலைகள் ஆகும். இவற்றிற்கு மேலதிக்மாக அப்பொருளை விற்றலாகாது.

உணவு விலைக் கட்டளை இல. ஏ. 69. அரிசி (மொத்தம்—சில்லறை).

## 1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக் கட்டுப்பாட்டுச் சட்டம்

### கட்டளை

1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 3(2) ம் பிரிவுடன் வாசிக்கப்படும் 4 ம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு அனுராதபுர மாவட்ட உதவி விலைக் கட்டுப்பாட்டதிகாரி (உணவு), ஜோன் கிளறன்ஸ் லக்ஸ்மன் மெல்டர் குணரத்தின ஆகிய யான் இக்கட்டளையால்—

(i) 1959 ம் ஆண்டு ஜுலை மாதம் 13 ந் திகதி வெளிவந்த 11,807 ம் இலக்க இலங்கை அரசாங்க விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட 1959 ம் ஆண்டு ஜுலை மாதம் 10 ந் திகதியைக் கொண்ட ஏ. 54 இலக்கமுள்ள எனது உணவு விலைக்கட்டளையை இத்திகதியிலிருந்து எடுத்துவிடுகிறேன் ;

(ii) இதனோடிருக்கும் அட்டவணையில் 2 ம், 3 ம் பத்தியில் குறிக்கப்பட்ட விலைகளை முறையே நிகர அந்தர் ஒன்றுக்கு மொத்த வியாபாரியின் ஆகக் கூடிய மொத்த விற்பனவு விலையாகவும், சில்லறை வியாபாரியின் ஆகக்கூடிய சில்லறை விற்பனவு விலையாகவும் குறிப்பிட்ட அட்டவணையில் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட விஸ்தீரண எல்லைக்குள் அரிசியை இவ்விலைகளுக்குக் கூடுதலாக விற்கக் கூடாதென உடனடியாக விதிக்கிறேன் ;

(iii) இக்கட்டளையின் நோக்கத்துக்காக —

(a) எத்தொகையாவது திரும்பி விற்கும் பொருட்டு விற்கும் விற்பனையோ, அல்லது நிகர அந்தர் தொகையில் ஒரே தடவையில் விற்கும் விற்பனையே மொத்த விற்பனையாகக் கருதப்படும் ;

(b) ஒரு மொத்த அந்தருக்குக் குறைந்த எத்தொகையாவது உணவுத் தேவைக்கு அல்லது பாவனைக்கு விற்கும் எவ்விற்பனவும் சில்லறை விற்பனையாகக் கருதப்படும் ;

(iv) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்ட விஸ்தீரண எல்லைகளுக்குள் எவராவது இதர பொருட்களுடன் கலந்து அல்லது தரம் குறைந்த அரிசியுடன் கலந்து விற்கக்கூடாதென ஆஞ்ஞையிடுகிறேன் ;

(v) அரிசியை விற்குமிடத்து விற்கப்படும் அரிசியைச் சுற்றிக் கொடுக்கும் உறை அல்லது கொள்கலம் இவைகளின் விலையும் குறிப்பிட்ட விலைகளில் அடங்கும் என ஆஞ்ஞையிடுகிறேன் ;

(vi) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்ட எல்லைக்குள், அரிசியை தம் வசத்தில் அல்லது தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் ஒவ்வொரு வியாபாரியும் அவ்விடத்தில் அரிசிக்கென இக்கட்டளையால் விதிக்கப்பட்ட ஆகக் கூடிய விலைகளைக் காட்டும் ஒரு அறிவித்தலைப் பகிரங்கமாகப் பார்வைக்கு வைத்தல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன்;

(vii) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகளை விதிக்கப்பட்ட விஸ்தீரண எல்லைக்குள் அரிசியை விற்கும் எவரும் அவ்வரிசியை வாங்குவோருக்கு மொத்த வியாபாரியும் வாங்குவோர் கேட்குமிடத்து சில்லறை வியாபாரியும் பின்வருவனவற்றைக் குறிப்பிட்டுப் பற்றுச் சீட்டுக் கொடுத்தல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன் —

(அ) விற்பனை நடந்த திகதி ;
(ஆ) விற்கப்பட்ட அரிசியின் தொகை (நிறை) ;
(இ) விற்கப்பட்ட அரிசிக்குக் கொடுக்கப்பட்ட விலை ;
(ஈ) விற்பனையின் தன்மை (அதாவது மொத்த விற்பனையா அல்லது சில்லறை விற்பனையா என்பது) ;

(viii) இக்கட்டளையின் நோக்கத்துக்காக " இருத்தல் " " இரு." என்பன " அவோர்டுபோஸ் " எடுத்தலளவை முறையின் பிரமாண இருத்தல் நிறையாகக் கருதப்படுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

1960 ம் ஆண்டு ஏப்றில் மாதம் 11 ந் திகதி முற்பகல் 9.30 மணிக்கு அனுராதபுரம் கச்சேரியில் ஒப்பமிடப்பட்டது.

ஜே. சீ. எல். எம். குணரத்தின,
உணவு விலைக் கட்டுப்பாட்டதிகாரி (உணவு),
அனுராதபுர மாவட்டம்.

### அட்டவணை

| பத்தி 1<br>விஸ்தீரண எல்லை | பத்தி 2<br>நிகர அந்தர் ஒன்றின் ஆகக்கூடிய மொத்த விலை<br>ரூ. ச. | பத்தி 3<br>நிகர இருத்தல் ஒன்றின் ஆகக்கூடிய சில்லறை விலை<br>ரூ. ச. |
|---|---|---|
| அனுராதபுர நகரசபை எல்லை | 14 51 | 0 13½ |
| அனுராதபுர நகரசபை எல்லை நீங்கிய நுவரகம் கோறலே | 14 79 | 0 14 |
| எப்பாவலைக் கோறலே | 15 7 | 0 14¼ |
| வில்லாச்சியாக் கோறலே | 15 0 | 0 14¼ |
| கடவத் கோறலே | 15 7 | 0 14¼ |
| கணதெரு கோறலே | 14 83 | 0 14 |
| காந்தாக் கோறலே | 15 7 | 0 14 |
| உலகலாக் கோறலே | 15 0 | 0 14¼ |
| உடிய மகுமை கோறலே | 15 2 | 0 14¼ |
| கல்பேக் கோறலே | 15 51 | 0 14½ |
| குஞ்சித்துக் கோறலே | 16 0 | 0 14¾ |
| கலகம் கோறலே (தெற்கு) | 15 56 | 0 14½ |
| கலகம் கோறலே (வடக்கு) | 15 64 | 0 14¾ |
| மாமினியாக் கோறலே | 15 13 | 0 14¼ |
| நாகம்பகா, கிறல்லாவா உடுறுவா கோறலே | 15 97 | 0 15 |
| மகாப்பொத்தான் கோறலே | 15 56 | 0 14¾ |
| மற்றம்பூவா கோறலே | 16 7 | 0 15¼ |

குறிப்பு.—இவ்விலைகள் மேலே சொல்லப்பட்ட பொருளை விற்கவேண்டுமென விதிக்கப்பட்ட விலைகள் அல்ல; இவை ஆகக்கூடிய விலைகளாகும். இவ்விலைகளுக்கு மேலாக அப்பொருளை விற்கலாகாது.

இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது